;


**රාජ්‍ය පරිපාලන, පළාත් සභා සහ පළාත් පාලන අමාත්‍යාංශය**

**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**Ministry of Public Administration, Provincial Councils and Local Government**

**නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව  சுதந்திர சதுக்கம், கொழும்பு 07,இலங்கை.  Independence Square, Colombo 07, Sri Lanka**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දුරකථන<br>தொலைபேசி<br>Telephone | 011-2696211-13<br>011-2166000 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax | 011-2695279 | ඊ-මේල්<br>மின்னஞ்சல்<br>E-mail | info@pubad.gov.lk | වෙබ් අඩවිය<br>இணையத்தளம்<br>Telephone | www.pubad.gov.lk |


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | MPubAd/ AcSD/Spl. Grade/2025 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2025.01.30 |

அமைச்சின் செயலாளர்கள்
மாகாண தலைமைச் செயலாளர்கள்
ஆணைக்குழுச்செயலாளர்கள்
மாவட்ட செயலாளர்கள் /அரசாங்க முகவர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## <u>இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் **I** இன் உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்கு தரமுயர்த்துதல்</u>

இலக்கம் 1670/33 ஐக் கொண்ட 2010.09.10 ஆந்திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணக் குறிப்பு இலக்கம் 2323/29 ஐக் கொண்ட 2023.03.16 ஆந்திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 08 ஆவது அரசியலமைப்புத் திருத்தஏற்பாடுகளின்படி 2025.01.01 ஆந்திகதிக்கு இலங்கை கணக்காளர் சேவையின் விசேட தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமை பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதற்கு பொதுச்சேவை ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

02. இதன்படி, இலங்கை கணக்காளர் சேவையின் விசேட தரத்தில் 2025.01.01 ஆந்திகதிக்கு நிலவும் வெற்றிடங்கள் பதின்மூன்று (13) னை நிரப்புவதற்கு பின்வருமாறு நிரப்புவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து சேவைமூப்புப் பட்டியல் வரிசைப்படி மொத்த வெற்றிட எண்ணிக்கையின் இரண்டு மடங்கு உத்தியோகத்தர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

03. விஷேட தரத்துக்கு தரமுயர்வு வழங்குவதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்

I. சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு தகைமையினைப் பூர்த்தி செய்திருத்தல். (இணைப்பு I)
II. தரமுயர்வுக்கான திகதியில் சேவையின் தரம் I இல் 05 ஆண்டுகள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் தரம் I க்கு தரமுயர்வு பெற்ற பின்னர் 05 சம்பள ஏற்றங்களை ஈட்டியிருத்தல்.
III. தரமுயர்வுக்கான திகதியில் சேவையில் 18 ஆண்டுகளுக்குக் குறையாத முனைப்பான சேவையைக் காலத்தினை பூர்த்திசெய்திருத்தல்
IV. தரமுயர்வுக்கான திகதிக்கு முந்தைய 05 ஆண்டுகளில் வருடாந்த
V. செயல்திறன் திருப்திகரமான அல்லது உயர் மட்டத்தில் நிலவுதல்.
VI. தரமுயர்வுக்கான திகதியில் பொதுச் சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் ஏற்பாடுகளின்படி ஒழுக்காற்றுத் தண்டனை பெற்றிராதிருத்தல்.
VII. மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டலை உரிய திகதியில் பூர்த்தி செய்திருத்தல் அல்லது விடுவித்திருத்தல்.

04. தரமுயர்வு முறை

4.1 சேவைப்பிரமாணத்துக்கான இலக்கங்கள் 2323/29 மற்றும் 2023.03.16 ஆந்திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மேற்கொள்ளப்பட்ட 8 ஆம் திருத்தத்தின் 10.3.2 ஆம் பந்திக்கிணங்க, பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில் சேவை மூப்பின் அடிப்படையில் தரமுயர்வு மேற்கொள்ளப்படுவதோடு பொதுச் சேவை ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப்படுகின்ற நேர்முகப்பரீட்சைக் குழுவொன்றின் கீழ் 2025.01.01 ஆம் திகதிக்கு நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் கூட்டுத்தொகையின் இரண்டு மடங்கினும் அதிகமாகாத விண்ணப்பதாரர்களை நேர்காணலுக்கு உட்படுத்தி சேவை மூப்பின் அடிப்படையில் விசேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான பரிந்துரையொன்று பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும்

4.2 அதன்படி பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நேர்முகப்பரீட்சைக் குழுவின் மூலம் முன்வைக்கும் பரிந்துரையின்படி தரம் Iஆம் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களின் சிரேஸ்ட நிலையின் ஒழுங்குவரிசைப்படி 2025.01.01 ஆம் தினத்திற்கு விசேட தரத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமனான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையொன்றுக்கு விசேட தரத்திலுள்ளவர்களின் உயர்த்தப்படும்.

05. விஷேட தரத்துக்கு தரமுயர்த்தப்படும் உத்தியோகத்தர்கள் விஷேட தரத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்ட பின்னர் அவ்வாறு நியமனம்பெற்ற திகதியில் இருந்து அவ்வாறே கடமைக்காக ஒரு மாதத்திற்குள் அறிக்கையிடாத உத்தியோகத்தர்களின் விசேட தரத்தின் உயர்வு பொதுச் சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 01/2021 (ii) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

06. 2025.01.01 ஆம் திகதிக்கு வெற்றிடங்களுக்காக பதவியுயர்வு செய்யப்படுவதோடு அத்திகதிக்கு வினைத்திறனான சேவையில் தகைமை பெறுகின்ற உத்தியோகத்தர்கள் தம்மால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை அமைச்சின் செயலாளர்கள், பிரதான செயலாளர்கள், மாகாணத் தலைமைச் செயலாளர்கள் திணைக்கள தலைவர்கள் மூலம் எனக்கு 2025.02.14 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். அன்றைய திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதோடு பிழையாக மற்றும் பூரணமின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

07. 2025.01.01 ஆம் திகதிக்கு மேற்கூறிய அடிப்படைத் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் மட்டுமே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்குமாறு தெரிவித்துக் கொள்வதோடு, மேலே பந்தி 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள, இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் கலந்து கொண்ட போதிலும் தரமுயர்வு கிடைக்காத அல்லது விண்ணப்பிக்க முடியாத உத்தியோகத்தர்களும் இந்த தரமுயர்வுகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

08. மேலும், 2024.07.01 ஆம் திகதி ஆம் திகதிக்கு இலங்கை கணக்காளர் சேவையில் விசேட தரத்திற்கு உயர்த்துவதற்காக நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய உத்தியோகத்தர்கள் இவ் அறிவித்தலின்படி விண்ணப்பங்களை முன்வைக்கும் போது, விண்ணப்பத்துடன் 2024 ஆண்டிற்குரிய செயலாற்றுகை அறிக்கை மற்றும் சம்பள ஏற்ற பத்திரத்தினை மாத்திரம் முன்வைப்பது போதுமானது.

09. இது தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கவும்.

பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின்படி

ஒப்பம்./ எஸ்.ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 0112698672
தொலைநகல் : 0112-693304
மின்னஞ்சல் முகவரி : d.acsd.pubad@gmail.com

இணைப்பு I

## <u>இலங்கை கணக்காளர் சேவை சேவைப் பிரமாணத்தின் V வது பின் இணைப்பு</u>

பின்வரும் தகைமைகளில் ஏதேனும் ஒரு தகைமையைப் பெற்றிருத்தல்

I. தொடர்புடைய துறைசார் பாடநெறியைப் பயின்று ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அரச நிதி மற்றும் கணக்கியல் நிறுவனத்தின் உறுப்புரிமை அல்லது இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் அல்லது **பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் அல்லது சான்றளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர்கள் சங்கத்தின் உறுப்புரிமை**;

அல்லது

II. **பொது நிதி முகாமைத்துவம்**, **நிதி முகாமைத்துவம்**, **பொது நிதி**, **கணக்கியல்**, **அபிவிருத்தி நிதி**, **வர்த்தகம்**, **பொருளியல்**, **வியாபார முகாமைத்துவம்**, **பொது முகாமைத்துவம்**, **தகவல் தொழில்நுட்பம்**, **அரச கொள்கை**, **திட்ட முகாமைத்துவம்** போன்ற தொடர்புடைய துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றை பெற்றிருத்தல்;

அல்லது

III. மேலே உள்ள (II) ஆவது உபபந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பட்டத்துடன் ஏதேனும் ஒரு பாடத் துறை தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து முதுமானி மட்டத்தில் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்;

அல்லது

IV. மேலே உள்ள பத்தி II இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடத் துறைகள் ஏதேனும் ஒன்றில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தால் வழங்கப்படும் பட்டப் பின்படிப்புப் பட்டம்;

அல்லது

V. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால், மேலே பந்தி II இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடத் துறைகளில் ஒன்று தொடர்பில் வழங்கும் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் I இன் உத்தியோகத்தர்களை விஷேட தரத்துக்குப் பதவி உயர்த்துவதற்கான விண்ணப்பம்**

அலுவலக உபயோகத்துக்காக மட்டும்

| | |
|---|---|
| விண்ணப்ப இலக்கம் | S |
| | F |

**(அ) பகுதி I – உத்தியோகத்தரால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.**

1. பெயர்

   :…………………………………………………………………………………….

   1.1 முழுப்பெயர் :…………………………………………………........செல்வி/திருமதி/திரு

   1.2 நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்:.........……………………..............................................

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :…………………………………………………………

   (தேசிய அடையாள அட்டையின் சான்றுப்படுத்தப்பட்ட நிழற்பிரதியொன்றை இலக்கம் 02 எனக் குறிப்பிட்டு இணைக்க வேண்டும் )

3. பிறந்த திகதி :…………………………………………………………………

4. தனிப்பட்ட முகவரி :…………………………………………………………………

5. தொலைபேசி இலக்கம் - 5.1 வீட்டு :……….....................5.2 கைப்பேசி:……………......

   5.3 மின்னஞ்சல்:……………………………………………………………….............

6. தற்போது வகிக்கின்ற பதவி ……………………………………………………...…

7. அமைச்சு/ திணைக்களம் :…………………………………………….....................

8. அலுவலக முகவரி :………………………………………………………………

9. 9.1 அலுவலக தொலைபேசி இலக்கம் :………………………………………….

   9.2 அலுவலக தொலைநகல் இலக்கம் :…………………………………………...

10. நியமன/ தரமுயர்வுத் திகதி :……………………………………………………..

    10.1 இ.க.சே. தரம் III இற்கு நியமனத் திகதி :……………………………………………

    10.2 இ.க.சே. தரம் II இற்கு தரமுயர்வுத் திகதி :……………………………………………

    10.3 இ.க.சே. தரம் I இற்கு தரமுயர்வுத் திகதி :……………………………………………

(சேவை நிரந்தரமாக்கப்பட்ட கடிதம், தரம் I இற்கு தரமுயர்த்தப்பட்ட கடிதத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை 10.3 என இலக்கமிட்டு இணைத்து அனுப்ப வேண்டும்)

11. தரம் I இற்கு தரமுயர்வு பெற்ற பின்னர் சேவையில் இல்லாத காலப் பகுதிகள் மற்றும் ஒழுக்காற்றுத் தண்டனைகள் விதிக்கப்படுதல் மூலம் சேவைக் காலம் குறைவடைதல்

11.1 லீவு பெற்றமையின் அடிப்படையில் சேவைக் காலம் குறைவடைதல் (பொருத்தமாயின் மாத்திரம் பூர்த்தி செய்யவும்)

| தொடர் இலக்கம் | லீவு அனுமதிக்கான நிபந்தனைகள் | காலப் பகுதி | | சேவைக் காலம் குறைக்கப்படும் நாட்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | | முதல் | வரை | வருடங்கள் | மாதங்கள் | நாட்கள் |
| I. | தாபனவிதிக் கோவையின் V:2.5.4 | | | | | |
| II. | தாபனவிதிக் கோவையின் XII: 16 | | | | | |
| III. | தாபனவிதிக் கோவையின் XII: 36 | | | | | |
| IV. | 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை | | | | | |
| V. | 10 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை | | | | | |
| VI. | ஏனைய சம்பளமற்ற லீவுகள் | | | | | |
| VII. | அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 14/2022 படி சம்பளமற்ற தேசிய வெளிநாட்டு விடுமுறை | | | | | |
| சேவைக் காலம் குறைவடையும் மொத்த நாட்களின் எண்ணிக்கை | | | | | | |

(லீவுகளுக்கு அனுமதி வழங்கிய கடிதங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை 11.1.i 11.1.ii, 11.1.iii என விடயத்துடன் தொடர்புடைய வகையில் இலக்கமிட்டு இணைக்க வேண்டும்.)

11.2 உத்தியோகத்தர் தாபனக்கோவையின் XII அத்தியாயத்தின் 14படி வெளிநாட்டு கல்வி விடுமுறை பெற்றுள்ளார்/ இல்லை

கால அளவு................................................. லிருந்து................................................ வரை

11.3 ஒழுக்காற்று விடயங்களின் அடிப்படையில் சேவைக் காலம் குறைவடைதல் (பொருத்தமாயின் மாத்திரம் பூர்த்தி செய்யவும்)

| ஒழுக்காற்றுத் தீர்மானம் | குற்றப் பத்திரத்திற்கு இணங்க குற்றம் நிகழ்ந்த காலப் பகுதி | சேவைக் காலம் குறைவடையும் நாட்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | வருடங்கள் | மாதங்கள் | நாட்கள் |
| I. ................... சம்பள ஏற்றங்களைப் பிற்போடுதல் | | | | |
| II. ஏனையவை | | | | |
| சேவைக் காலம் குறைவடையும் மொத்த நாட்களின் எண்ணிக்கை | | | | |

(ஒழுக்காற்றுத் தீர்மானங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை 11.3.i, 11.3.ii என விடயத்துடன் தொடர்புடைய வகையில் இலக்கமிட்டு இணைக்க வேண்டும்.)

11.4 மேலே 11.1 மற்றும் 11.3 இன் கூட்டுத்தொகை: வரு ................ மாத ................... நாள் .........

11.5 தரம் I இற்கு நியமிக்கப்பட்ட திகதியின் பின்னர் மேலே 11.4இல் உள்ள காலப்பகுதியினை நீக்கும்போதான திகதி:…......………….

12. அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை 01/2020இன் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின்படி செயற்திறன்மிக்க மற்றும் மகிழ்ச்சிகரமான சேவை காலத்தினை பூர்த்தி செய்திருத்தல்

12.1 பதவி உயர்வுக்கான தகைமை பெறுகின்ற 2025.01.01 **தினத்திற்கு** முந்தைய 5 **வருடத்திற்குள் அனைத்து** சம்பள ஏற்றங்களையும் ** ஈட்டியுள்ளார்/ ஈட்டவில்லை*
(தாபன விதிக்கோவையின் XII:16:9, XII:16:10 மற்றும் XII:36:1:4 (i) மற்றும் (ii) ஆகியவற்றின் கீழ் பெறப்பட்ட சம்பள ஏற்றம் பதவி உயர்வுக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

*(தேவையற்ற சொற்களை வெட்டி விடவும்)

12.2 பதவி உயர்வுக்கான தகைமை பெறுகின்ற 2025.01.01 **தினத்திற்கு** முந்தைய 5 ஆண்டுகளில் எந்த சம்பள ஏற்றமும் பெற்றில்லை எனின் சம்பள ஏற்றம் 05 பெறும் திகதி வரை பதவி உயர்வுக்கான தகைமை பெறும் திகதியை மீண்டும் கணக்கிட வேண்டும். அதன்படி தகைமை பெறும் திகதி** : ……….....……..

** (சம்பள ஏற்றப் பத்திரங்களின் ஐந்தின் (05) சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை 12.1 முதல் 12.5 வரை இலக்கமிட்டு இணைக்கவும்)

13. பொதுச் சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு ஆளாகாதிருத்தல்

13.1 கோப்பின்படி, பதவி உயர்வுக்கான தகைமைபெறும் திகதிக்கு முந்தைய 05 ஆண்டுகளில் ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு ஆளாகவில்லை. (திணைக்களத் தலைவரால் இது குறித்து எழுத்துமூல அறிவிப்பு மூலம் சான்றுப்படுத்தப்பட வேண்டும் - விண்ணப்பத்தின் (ஆ) பகுதியின் கீழ்)

13.2 13.1 இல் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு ஆளாகியுள்ளதோடு 11.2 இன் கீழ் விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் மற்றும் அதற்கேற்ப பதவி உயர்வுத் திகதி திருத்தப்படுமாயின் அத் திகதி :.......................................…............

13.3 பதவி உயர்வுக்கான தகைமை பெறும் திகதி 12.2 மற்றும் 13.2 இன் படி திருத்தப்பட்டால், புதிதாகத் திருத்தப்பட்ட திகதி :……………………

14. முந்தைய ஆண்டுகளின் வருடாந்த செயலாற்றுகை மதிப்பீட்டின்படி சிறந்த செயல் மற்றும் நடத்தையின் பிரதிபலிப்பு.

மேலே 12 அல்லது 13 இன்படி தகைமை பெறுகின்ற திகதிக்குரிய ஆண்டுக்கு முந்தைய 05 ஆண்டுகளின் கீழே உள்ள அட்டவணையில் பதிவு செய்ய வேண்டும். அந்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி அனைத்து ஆண்டுகளின் செயலாற்றுகை அறிக்கைகளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்பட வேண்டும். செயலாற்றுகை அறிக்கையின் இறுதி மதிப்பீட்டில் மாற்றுப் பரிந்துரைகள் ஒன்றுக்கும் மேல் வழங்கப்பட்டுள்ள மற்றும் உரிய உத்தியோகத்தரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை வைக்கப்பட்டிராத அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

| வருடம் | இறுதி மதிப்பீடு<br>சிறப்பானது/ சாதாரணத்திலும் அதிகம்/<br>திருப்திகரமானது/ அதிருப்திகரமானது | உரிய உத்தியோகத்தர்கள்<br>கையொப்பமிட்டுள்ளனர்/<br>கையொப்பமிடவில்லை |
|---|---|---|
| 2020 | | |
| 2021 | | |
| 2022 | | |
| 2023 | | |
| 2024 | | |

ஒவ்வொரு வருடத்தினதும் செயலாற்றுகை அறிக்கையின்படி அனைத்து வரிசையும் பத்தியும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்

15. இலங்கை கணக்காளர் சேவை பிரமாணக் குறிப்பின் 10.3.1. மற்றும் (v) பின்னிணைப்பின்படி தகைமைகள் பற்றிய விபரங்கள்:

| 15.1 தொடர் இலக்கம் | 15.2 பட்டப் பின்படிப்பு/ வேறு | 15.3 விடயத் துறை | 15.4 அந்தப் பட்டத்தை/ தகைமையை வழங்கும் பல்கலைக்கழகம்/நிறுவனம் | 15.5 அந்த பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஒரு பல்கலைக்கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பது | 15.6 பட்டம்/ கற்கைநெறிக் காலப் பகுதி (ஆரம்பித்த மற்றும் முடிவடைந்த திகதி) | 15.7 பட்டம்/ கற்கைநெறி செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |
| 5. | | | | | | |

(15.1 ஆக இலக்கமிட்டு பட்டப் பின்படிப்பு சான்றிதழின்/ கற்கைநெறியின், விரிவான பட்டச் சான்றிதழின்/ பாடநெறியின் சான்றுப்படுத்திய பிரதிகளை இணைத்தல் வேண்டும்)

16. தரமுயர்வு பெறுவதற்கு தகைமை பெறும் திகதியில் சேவையில் பதினெட்டு (18) வருடங்களுக்குக் குறையாத முனைப்பான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார்/ செய்யவில்லை.*: ……………………......

17.

மேலே 01 முதல் 17 வரை சரியானதும் முழுமையானதுமான தகவல்களைக் கொண்ட விண்ணப்பம் மற்றும் இணைத்து அனுப்புமாறு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களினதும் சான்றுப்படுத்திய பிரதிகளையும் விடயத்துடன் தொடர்புடைய இலக்கங்களை ஒவ்வொரு ஆவணத்தினதும் வலது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு <u>இலக்க ஒழுங்கில் இணைத்து கோப்பாகத் தயாரித்து</u> இத்தோடு சமர்ப்பிக்கிறேன்.

மேலும் என்னால் பதவி உயர்வின்பேரில் நியமிக்குமாறு கோரப்பட்டுள்ள இலங்கை கணக்காளர் சேவையில் விசேட தர பதவியொன்று வெற்றிடமாக உள்ள எந்தவொரு சேவை நிலையத்துக்கு / அந்த நிலையங்களுக்கு மிக அருகிலுள்ள சேவை நிலையமொன்றுக்கு இலங்கை கணக்காளர் சேவையில் விசேட தர பதவியொன்றுக்கு நியமிக்கப்பட எனது விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திகதி : ...........................                    ....................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்
மற்றும் பதவிப் பெயர்

ச.யு.

2024.07.01 ஆம் திகதி ஆம் திகதிக்கு இலங்கை கணக்காளர் சேவையில் விசேட தரத்திற்கு உயர்த்துவதற்காக நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய உத்தியோகத்தர்கள் இவ் அறிவித்தலின்படி விண்ணப்பங்களை முன்வைக்கும் போது, விண்ணப்பத்துடன் 2024 ஆண்டிற்குரிய செயலாற்றுகை அறிக்கை மற்றும் சம்பள ஏற்ற பத்திரத்தினை மாத்திரம் முன்வைப்பது போதுமானது.

**பகுதி (ஆ) - திணைக்களத் தலைவரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.**

செயலாளர்,

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

1. ஆண்/பெண் உத்தியோகத்தரால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் சரியானவையாகும்.
2. இல.11,12 மற்றும் 13 க்குரிய விடயங்கள் கோப்புடன் ஒப்பு நோக்கப்பட்டன. குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சரியானவை என்றும் அனைத்து தகவல்களும் முழுமையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் உரிய அனைத்து ஆவணங்களினதும் **சான்றுப்படுத்தப்பட்ட** பிரதிகள் இணைத்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.
3. ஆண்/பெண் உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டோ அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகள் இடம்பெற்றுக்கொண்டோ இருக்கின்றன/இல்லை.*

3.1 மேற்படி பதில் "இருக்கின்றன" எனின் தவறிழைத்த திகதி: ......................................................

3.2 ஒழுக்காற்று அதிகாரியால் வெளியிடப்பட்ட குற்றப்பத்திர இலக்கம் மற்றும் திகதி: ....................

4. ......................................................................................... திரு/திருமதி/செல்வி .. என்பவரது கடமைசார்/ வருகை/ நடத்தை திருப்திகரமானது. அவரது செயலாற்றுகை, தலைமைத்துவம், இயலுமை மற்றும் அடுத்த தரமுயர்வுக்குரிய பதவிகள் மற்றும் பொறுப்புக்களை வகிக்கின்ற இயலுமையினை பரிசீலித்துப் பார்த்தேன். அவரை இலங்கை கணக்காளர் சேவையின் விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கு பரிந்துரை செய்கிறேன்/ பரிந்துரை செய்யவில்லை*

5. சரியாக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தையும், ஒவ்வொரு விடயத்துடனும் தொடர்புடைய இலக்கங்களைக் குறித்து, இலக்க ஒழுங்குமுறைப்படி உரிய ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் இணைத்துத் தயாரிக்கப்பட்ட கோவையை இத்துடன் அனுப்புகிறேன்

திகதி : ........................................

........................................
திணைக்கள / நிறுவனத் தலைவரின்
கையொப்பம், பதவிப் பெயர்
மற்றும் பதவி முத்திரை

குறிப்பு: தேவையற்ற சொற்களை வெட்டி விடவும்.

**பகுதி (இ) - உரிய அமைச்சின் செயலாளரினால் அல்லது மாகாண செயலாளரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.**

செயலாளர்,

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

1. இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I இலுள்ள திரு/திருமதி/செல்வி ........................................................................................... என்பவரின் கடமைகள் மற்றும் நடத்தை தொடர்பில் திணைக்கள/ நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் உடன்படுகின்றேன்/ உடன்படவில்லை..*

2. உத்தியோகத்தரின் கடமைசார்/ நடத்தை / விஷேட திறன்கள் மற்றும் செயல்திறனை மதிப்பீட்டுக்கு உட்படுத்தினேன். ......................................................................................................... திரு / திருமதி/ செல்வி என்பவரை இலங்கை கணக்காளர் சேவையின் விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கு **பரிந்துரை செய்கிறேன்./செய்யவில்லை.***
(* பரிந்துரை செய்யாவிட்டால், காரணத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடவும்.)

.......................................................................................................................................

.......................................................................................................................................

3. சரியாக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தையும், ஒவ்வொரு விடயத்துடனும் தொடர்புடைய இலக்கங்களைக் குறித்து, இலக்க ஒழுங்குமுறைப்படி உரிய ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் இணைத்துத் தயாரிக்கப்பட்ட கோவையை இத்துடன் அனுப்புகிறேன்.

திகதி : ................................

....................................................
செயலாளர்,
.................................. அமைச்சு/
பதவி முத்திரை

குறிப்பு - தேவையற்ற சொற்களை வெட்டி விடவும்.